**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 28.10.2025

**அசல் வழக்கு எண்.76/2016**

**வா.சா.1 – ஜெயந்தி, க/பெ.யோகவேல்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நீங்கள் வழக்கு பி பட்டியல் சொத்து கிழக்கு மேற்கு 16 அடி வடக்கு தெற்கு 26 ¾ அடி என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அதில் பிரதிவாதியின் அனுபவத்தில் இருப்பது தெற்கு பகுதியில் கிழக்கு மேற்கு 16 அடி வடக்கு தெற்கு 17 ½ அடி என்றால் சரியில்லை. பிரதிவாதி 2004 ஆம் ஆண்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியில்லை. 2016 இல் தான் வீடு கட்டினார்கள். பிரதிவாதி இடம் வாங்கியதிலிருந்து மேற்சொன்ன இடத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியில்லை. பிரதிவாதி அனுபவத்தில் உள்ள இடத்தில் சீமை ஓடு போட்ட கட்டிடத்தில் இருக்கிறார் என்றால் தெரியவில்லை. அந்தக் கட்டிடத்தில் பிரதிவாதியின் தாயார் ரத்தினம்மாள் அங்கு அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது. ஆகவே வழக்கு பி பட்டியல் சொத்து தவறாக கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியில்லை. மேற்படி தாவா பி பட்டியல் சொத்து உங்களுடைய அனுபவத்திலும் உங்களுக்கு கிரயம் கொடுத்தவர் அனுபவத்திலும் இல்லை என்றால் சரியில்லை. ஏனெனில் தாவா பி பட்டியில் தென்பகுதியில் கிழக்கு மேற்கு 16 அடி வடக்கு தெற்கு 17 ½ அடி கடந்த 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பூபாலன் என்பவர் அவரது சகோதரர் பிரதிவாதி சண்முகத்திற்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியில்லை. ஆகவே உங்களுக்கும் பிரதிவாதி நிர்மலா தேவி என்பவருக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை வழக்கு பொய்யாக தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. உங்களுக்கு கிரயம் கொடுத்தவர் கிரயமும் செல்லாது நீங்கள் கிரயம் கொடுத்த ஆவணமும் செல்லாது என்றால் சரியில்லை. ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.